NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 4 February 2019

# குழு உணர்வை வளர்க்கும் ‘ஸ்போர்ட்ஸ் ஸ்பெக்ட்ரா’

ப. பாலசுப்பிரமணியம்

இந்திய இளையர்கள் ஒன்றுகூடித் தங்களின் விளையாட்டுத் திறனை வெளிக்காட்டும் தளமாக ஒவ்வோர் ஆண்டும் நடைபெற்று வருகிறது ‘ஸ்போர்ட்ஸ் ஸ்பெக்ட்ரா’. கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக இடம் பெற்று வரும் இந்த விளையாட்டுப் போட்டிகள் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத் தமிழர் பேரவையால் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

உற்சாகம் குறையாமல் போட்டிகளில் பங்கேற்கும் இளையர் குழுக்கள் களத்தில் இறங்கியதும் பரிசுகளை வெல்ல முனைப்போடு முட்டி, மோதி, விளையாடி ஒரு கை பார்த்துவிடுவர்.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட மற்ற பல்கலைக்கழக, தொடக்கக் கல்லூரி, பலதுறைத் தொழிற்கல்லூரி மாணவர்களும் இதில் சேர்ந்து கடும் போட்டி கொடுப்பார்கள்.

ஆண்களுக்குக் காற்பந்தாட்டம், பெண்களுக்கு ‘கெப்டன்ஸ் பால்’ எனத் தொடங்கிய இந்த விளையாட்டுப் போட்டிகளில் பின்னர், ‘பிட்டு கராம்’ போன்ற புதிய விளையாட்டும் இணைந்துள்ளது.

இது மேற்கத்திய ‘டோச்பால்’ போன்ற விளையாட்டுடன் தொடர்புபடுத்தலாம் என்று தெரிவித்தார் போட்டிகளின் இயக்குநர் குமாரி வி. ஜொலின் நிவேதா.

இதற்கு மேல் இவ்வாண்டு கேளிக்கை விளையாட்டுகள் கொண்ட கூடாரம் ஒன்றையும் பங்கேற்பாளர்கள் எதிர்பார்க்கலாம்.

கரகத்தைத் தலையில் சுமந்தவாறு தடைகளைப் கடப்பது, கேரம் விளையாட்டு, கோலிகுண்டு விளையாட்டு, கோலம் இடுதல் எனப் பல்வேறு நடவடிக்கைகளில் பங்கேற்பாளர்கள் ஈடுபடலாம்.

‘ஸ்போர்ட்ஸ் ஸ்பெக்ட்ரா’ போட்டிகளில் இந்தியர்கள் அல்லாத மற்ற மாணவர்களும் பங்கு எடுக்கலாம். ஒரு குழுவில் அதிகபட்சமாக எட்டு பேர் வரை பதிவு செய்யலாம். ஆண்கள், பெண்கள் என இரு பிரிவுகளில் குழுக்கள் போட்டியிடலாம்.

பதிவு செய்யும் குழுக்கள் காற்பந்து, ‘கெப்டன்ஸ் பால்’, ‘பிட்டு கராம்’ ஆகிய விளையாட்டுகளிலும் பங்குபெற வேண்டும்.

போட்டியாளர்களை உற்சாகப்படுத்த சிங்கப்பூர் ஓட்டப்பந்தய சகாப்தம் திரு சி. குணாளன் சிறப்பு விருந்தினராக நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறார்.

இம்மாதம் 23ஆம் தேதி சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக விளையாட்டு அரங்கில் நடக்க இருக்கும் ‘ஸ்போர்ட்ஸ் ஸ்பெக்ட்ரா’ விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் குழுக்கள் http://bit.ly/Spectra19grp என்ற இணையப் பக்கத்தில் பதிவு செய்யலாம்.

தனிநபர்கள் http://bit.ly/Spectra19indiv என்ற இணையப் பக்கத்தை நாடலாம். மேல் விவரம் பெற 98508752 என்ற எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.








கடந்தாண்டுகளில் ‘ஸ்போர்ட்ஸ் ஸ்பெக்ட்ரா’ விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு விளையாடிய இளையர் குழுக்கள்.

**படங்கள்: சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத் தமிழர் பேரவை**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.